**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.163/2018**

**Deposition of Witness for : P.W.17**

**Name : Dr.BalaKamesh**

**Father's Name :**

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

எதிரிகள் 1 முதல் 6 ஆஜர். 7 முதல் 10 எதிரிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18.08.2023.**

முதல் விசாரணை -

நான் தற்போது ஆரணி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 2017ஆம் ஆண்டு காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது, 21.1.2017 அன்று மாலை 5 மணி அளவில் பிரேத பரிசோதனைக்காக தலைமை காவலர் சடகோபன் என்பவரால் காவல் ஆய்வாளர் கொடுத்த விண்ணப்பத்தின் அடிப்படையில் குற்ற எண்.26/2017 சட்டப்பிரிவுகள் 147,148, 302 இதச

வழக்கில் சம்பந்தப்பட்ட சுரேஷ், 38 வயது ஆண் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு வந்தபோது அங்கமச்ச அடையாளங்கள் பார்க்கப்பட்டு, பிண விரைப்பானது கை கால்களில் இருந்தது. அன்று 5 மணி அளவில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. நல்ல திடகாத்திரமான ஆண் சடலம் நிமிர்ந்த நிலையில் கண்கள் மூடிய நிலையில் அனைத்து பற்களும் இருந்தது.

<u>வெளிப்புற காயங்கள்.</u>

1) 5x1x1 செ.மீ அளவில் கிழிந்த காயம் இடது தலையின் முன்பகுதியில் முடிக்கு கீழ் வரை இருந்தது. இரண்டு நக காயங்கள் வலது கழுத்தில் காணப்பட்டது.

2) 3x1x1 செ.மீ அளவில் வலது பின்பக்க மண்டையில் காணப்பட்டது.

<u>உட்புற காயங்கள்.</u>

இருதயம் 250 கிராம் ரத்த உறைந்த நிலையிலும், வலது நுரையீரல் 350 கிராம், இடது நுரையீரல் 300 கிராம் சுருங்கிய நிலையில் காணப்பட்டது. வலது குரல்வளை எலும்பு எலும்பு முறிவுடனும், வலது பக்க தைராய்டு சுரப்பியில் எலும்பு முறிவு காணப்பட்டது. மார்புகூட்டில் 50 கிராம் ரத்தம் உறைந்து காணப்பட்டது.

கல்லீரல் 1100 கிராம் எடையுடன் சுருங்கி காணப்பட்டது. மண்ணீரல் 100 எடையுடன் சுருங்கி காணப்பட்டது. சிறுநீரகம் 100 எடையுடன் சுருங்கி காணப்பட்டது. வயிற்று குழியில் 200 எம்.எல் திரவம் இருந்தது. மண்டை ஓடு மற்றும் மூளை நல்ல நிலையில் இருந்தது. வயிற்று குழி நல்ல நிலையில் இருந்தது. இறந்தவர் சுவாச கோளாறினால் மூச்சு

**அடைப்பு ஏற்பட்டு மாரடைப்பினால் இறந்தார் என்று நான் கருத்து தெரிவித்து வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.26.**

**பிரேத பரிசோதனையின்போது எடுக்கப்பட்ட உடல் உள்ளுறுப்பு மாதிரிகள் மற்றும் குரல்வளை எலும்பு ஆகியவை வேலூர் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதுசம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.**

**1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**நான் பார்த்தாக கூறும் வெளிப்புற காயங்கள் ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் தலைகவசத்துடன் சென்று புதர்கள் அடர்ந்த பகுதியில் விழும்போது புதரில் கற்கள் இருந்தால் மேற்கண்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் வாய்ப்பு இல்லை. அவ்வாறு விழும்போது சிராய்ப்பு காயங்கள் முகத்தில் மற்ற காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டே தவிர 5x1x1 செ.மீ அளவில் காயங்கள் ஏற்பட வாய்ப்பு இல்லை. என்னுடைய பிரேத பரிசோதனை அறிக்கையில் காயங்களின் அளவின் அலகு சொல்லப்படவில்லை என்றால் சரி தான்.**

**வெட்டு காயம் பார்க்கவில்லை என்றால் 1வது காயத்தின் ஆழத்தை பார்த்தால் அது வெட்டு காயம் தான். கிழிந்த காயம் வெட்டு காயமாகாது என்றால் காயத்தில் பல வகை உண்டு. கிழிந்த காயமாக இருந்தாலும் 1வது காயம் நான் பார்த்த வகையில் வெட்டுக்காயம் தான். வெட்டுக்காயமானது தரையில் விழும்போது கூர்மையான கற்களால் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் வாய்ப்பு இல்லை.**

**நக குறி காயத்திற்கு அளவுகள் குறிப்பிடவில்லை என்றால் சரி தான்.**

கிழிந்த காயத்தினால் இறப்பானது ஏற்படவில்லை என்றால் சரி தான். இடது பக்க கழுத்தில் நக குறி காயங்கள் பார்க்கவில்லை என்றால் சரி தான்.

ஹெல்மெட்டின் கண்ணாடி பகுதி உடைந்து, உடைந்த ஹெல்மெட்டின் கண்ணாடி பகுதி கழுத்தில் அழுத்துவதால் நக காயங்கள் போல் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உண்டா என்றால் நக காயம் வடிவில் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை. கீழே விழும் இடத்தில் கூர்மையான பரப்பு இருந்து அதில் கழுத்து பகுதி படும்போது நக காய வடிவில் காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் நக காயம் வடிவில் காயம் ஏற்பட வாய்ப்பு இல்லை. குத்து காயம் போன்று தான் காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

ஒரு நபரை கையால் குரல்வளையில் அழுத்தும்போது எவ்வளவு நேரத்தில் மரணம் ஏற்படும் என்றால் அழுத்தப்படும் நபரின் வேகம், அழுத்தும் திறமை, அழுத்தம் வாங்கப்படும் நபரின் நிலைமை ஆகியவற்றை வைத்து தான் சொல்ல முடியும். கழுத்தில் அழுத்தத்தினால் காயம் ஏற்படும் போது கழுத்தின் உட்புறத்தில் என்னென்ன காயங்கள் ஏற்படவாய்ப்புண்டு என்றால் ரத்த கசிவு தொடர்ந்து ரத்த கட்டு இருக்கும், கழுத்தில் தசைகளில் ரணங்கள் இருக்கும். அழுத்தம் எலும்பில் படும்போது எலும்பு முறிவு ஏற்படும்.

இந்த வழக்கில் கழுத்தில் ரத்த கட்டு ஏதும் இல்லை என்றால் ரத்த கட்டு மற்றும் குரல்வளை எலும்பு முறிவு மற்றும் தைராய்டு எலும்பு முறிவு உள்ளது. ஒரு நபருக்கு மூச்சு திணறல் ஏற்பட்டு இறக்கும் பட்சத்தில் மூளையில் ரத்த கசிவு ஏற்பட வாய்ப்புண்டு என்றால் உண்டு. ஆனால் உடனடியாக நடக்கும் மூச்சு திணறலால் ஏற்படும் இறப்பிற்கு ஏற்பட

**வாய்ப்பு இல்லை.**

**மூச்சு திணறலால் இறப்பு ஏற்படும்போது பெட்டிகல் எமரேஸ் மூளையில் ஏற்படவேண்டும் என்பது மருத்துவ விதி என்றால் பெட்டிகல் எமரேசை வெறும் கண்களால் பார்க்க இயலாது. மூளையை திறந்து ஆய்வு செய்து பார்க்கவில்லை என்றால் சரி தான். விழி திரைகளில் ரத்த கசிவு பற்றி பார்த்தேனா என்றால் கண்கள் மூடிய நிலையில் இருந்ததால் பார்க்கவில்லை. மூக்கிலும், உதட்டிலும், வாயிலும் சிராய்ப்பு காயங்கள் பார்க்கவில்லை என்றால் பார்க்கவில்லை.**

**நான் கொடுத்த பிரேத பரிசோதனை அறிக்கையில் குறைவான சங்கதிகள் உள்ளது என்றால் சரி தான். மூச்சு திணறலால் இறப்பு ஏற்படும்போது முகம் வீங்கி நீல கலரில் காணப்படவேண்டும் என்றால் பிண விரைப்பு இருந்ததால் மேற்கண்ட அறிகுறிகள் வராது. நுரையீரல் ரத்த கசிவு பார்க்கவில்லை என்றால் சரி தான். மூச்சு திணறலால் இறக்கும்போது வலது அறையில் கருப்பு நிற ரத்தம் காணப்படவேண்டும், இடது அறை காலியாக இருக்கவேண்டும் என்றால் இரண்டு அறைகளிலும் ரத்த கசிவு இருந்தது.**

**வயிற்று அறையில் ரத்த கசிவு நான் பார்க்கவில்லை என்றால் பார்த்தேன். ரத்த கசிவு இல்லை. பிறப்பு உறுப்பில் ரத்தம் மற்றும் விந்து வெளியேற்றம் ஆகியவை எதுவும் இல்லை என்றால் சரி தான். மூக்கு, காது, வாய் ஆகியவற்றில் ரத்தம் வரவில்லை என்றால் சரி தான். வயிற்றில் 200 எம்.எல். திரவமானது என்ன திரவம் என நான் அறிந்துக்கொள்ளவில்லை என்றால் சரி தான்.**

கன்னக்குழி எலும்பில் சிராய்ப்பு காயங்களோ, கன்றிய காயங்களோ பார்க்கவில்லை என்றால் சரி தான். மூச்சு குழலில் அழுத்த காயம் பார்த்தேனா என்றால் பார்த்தேன். மூச்சு குழல் பகுதியில் தான் ரத்த கட்டுகள் இருந்தது. பிரேத பரிசோதனை அறிக்கையில் முகம் வெளிரி இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரி தான். மருத்துவ விதிக்குட்பட்டு பிரேத பரிசோதனை அறிக்கையில் முக்கியமான சங்கதிகளை குறிப்பிடவில்லை என்றால் சில விஷயங்கள் சொல்லப்படவில்லை.

1 முதல் 6 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை 7 முதல் 10 எதிரிகள் தரப்பில் ஏற்றுக்கொள்வதாக எடுத்துரைக்கப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- K.Vijaya.

Additional Sessions Judge,

Arani.